# DEPARTMENT OF GOVERNMENT INFORMATION

රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව அரசாங்க தகவல் திணைக்களம்

## APPLICATION FOR MEDIA ACCREDITATION 2026 – 2027

මාධ්‍ය හැඳුනුම්පත සඳහා අයැදුම්පත ஊடக அடையாள அட்டைக்கான விண்ணப்பம் – 2026-2027

General Instructions පොදු උපදෙස් பொதுவான வழிமுறைகள்:

1. Since data are fed into the computerised system only in the English language, all sections of this application, except Section 2ii, shall be completed in English block letters only. Each box shall contain one letter per box, and one box shall be left blank between words to clearly indicate spacing. පරිගණකගත පද්ධතියට දත්ත ඇතුළත් කළ හැක්කේ ඉංග්‍රීසි භාෂාවෙන් පමණක් බැවින් අයැදුම්පතෙහි 2ii කොටස හැර අන් සියලු කොටස් ඉංග්‍රීසි කැපිටල් අකුරුවලින් පමණක් සම්පූර්ණ කළ යුතුය . දී ඇති කොටු තුළ එක් කොටුවකට එක් අකුරක් පමණක් වන සේ ලිවිය යුතු අතර , එක් වචනයකට පසු එක් කොටුවක් අත්හැර හිස්තැන පැහැදිලිව දැක්විය යුතුය . தரவு கணினி அமைப்பில் ஆங்கில மொழியிலேயே உள்ளிடப்படுவதால், இவ்விண்ணப்பப் படிவத்தின் 2ii ஆம் பிரிவுகளைத் தவிர்த்து, பிற அனைத்து பிரிவுகளும் ஆங்கிலப் பெரிய எழுத்துக்களால் மட்டும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு பெட்டியிலும் ஒரு எழுத்து மட்டும் எழுதப்பட வேண்டும், மேலும் சொற்களுக்கிடையில் இடைவெளி காட்ட ஒரு பெட்டி காலியாக விடப்பட வேண்டும்.

2. The application form shall be typewritten or filled in using a blue or black pen. අයැදුම්පත යතුරුලියනය කර හෝ නිල් /කළු පෑනකින් පිරවිය යුතුය. விண்ணப்பப் படிவம் தட்டச்சு செய்யப்படல் அல்லது நீல அல்லது கறுப்பு பேனாவால் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

1. Name in Full (in English) සම්පූර්ණ නම (ඉංග්‍රීසියෙන්) முழுப் பெயர் (ஆங்கிலத்தில்)

2. Name to be Printed on the Media Accreditation මාධ්‍ය හැඳුනුම්පතේ මුද්‍රණය කළ යුතු නම ஊடக அடையாள அட்டையில் அச்சிடப்பட வேண்டிய பெயர்

i. in English ඉංග්‍රීසියෙන් ஆங்கிலத்தில்

ii. in Sinhala or Tamil සිංහලෙන් හෝ දෙමළෙන් சிங்களம் அல்லது தமிழில்

3. Date of Birth උපන් දිනය பிறந்த திகதி

Y Y Y Y M M D D

4. NIC No. ජාතික හැඳුනුම්පත් අංකය தேசிய அடையாள அட்டை இல

5. Gender ස්ත්‍රී/පුරුෂ பால்

6. Job Title/Designation රැකියාව/තනතුර தொழில்/பதவி

7. Name of Media Institution මාධ්‍ය ආයතනයේ නම ஊடக நிறுவனத்தின் பெயர்

Photograph

ඡායාරූපය

நிழற்படம்

3.5 cm x 4.5 cm

8. Name of the Newspaper/Magazine/TV Channel/Radio Channel/Web Site පුවත්පතේ/ සඟරාවේ/රූපවාහිනී නාලිකාවේ/ගුවන්විදුලිය නාලිකාවේ/වෙබ් අඩවියේ නම செய்தித்தாள்/சஞ்சிகை/தொலைக்காட்சி அலைவரிசை /வானொலி அலைவரிசை/வலைத்தளத்தின் பெயர்

9. Main Function of the Job රැකියාවේ ප්‍රධාන කාර්යය சேவையின் முக்கிய செயற்பாடு

10.Details of Previous Media Accreditation අවසන් වරට ලබාගත් මාධ්‍ය හැඳුනුම්පතේ තොරතුරු கடைசியாக பெற்ற ஊடக அடையாள அட்டை விபரம்

Number අංකය எண்

Year වර්ෂය ஆண்டு

11. If you are a Provincial Journalist, please specify the district you cover ඔබ ප්‍රාදේශීය මාධ්‍යවේදියෙකු නම් , ඔබ විසින් ආවරණය කරනු ලබන දිස්ත්‍රික්කය කුමක්ද நீங்கள் பிரதேச ஊடகவியலாளர் என்றால், நீங்கள் செய்தி சேகரிக்கும் மாவட்டத்தை குறிப்பிடவும்

12. Address (Official) ලිපිනය (කාර්යාලය) முகவரி (அலுவலகம்)

13. Telephone No. (Official) දුරකථන අංකය (කාර්යාලය) தொலைபேசி இல (அலுவலகம்)

14. Fax (Official) ෆැක්ස් අංකය (කාර්යාලය) தொலைநகல் இல. (அலுவலகம்)

15. E-mail (Official) විද්‍යුත් තැපැල (කාර්යාලය) மின்னஞ்சல் (அலுவலகம்)

16. Address (Personal) ලිපිනය (පෞද්ගලික) முகவரி (தனிப்பட்ட)

17. Telephone No. (Personal) දුරකථන අංකය (පෞද්ගලික) தொலைபேசி இல (தனிப்பட்ட)

18. Mobile No. (Personal) ජංගම දුරකථන අංකය (පෞද්ගලික) கையடக்க. (தனிப்பட்ட)

19. E-mail (Personal) විද්‍යුත් තැපැල (පෞද්ගලික) மின்னஞ்சல் (தனிப்பட்ட)

Declaration of the Applicant අයැදුම්කරුගේ ප්‍රකාශය விண்ணப்பதாரரின் பிரகடனம்

I hereby declare that the information furnished above by me is true and correct to the best of my knowledge and belief. I further acknowledge that, in the event any of the particulars provided are found to be false or incorrect, the Director General of Government Information reserves the full authority to withdraw or cancel the media accreditation issued under his signature.

ඉහත සඳහන් තොරතුරු සත්‍ය හා නිවැරදි බව මම මෙයින් ප්‍රකාශ කරන අතර , කිසියම් තොරතුරක් අසත්‍ය හෝ වැරදි බව සොයා ගනු ලැබුවහොත් , රජයේ ප්‍රවෘත්ති අධ්‍යක්ෂ ජනරාල්වරයාට තම අත්සනින් නිකුත් කර ඇති මාධ්‍ය හැඳුනුම්පත අහෝසි කිරීමට හෝ අවලංගු කිරීමට පූර්ණ බලය ඇති බව මම තවදුරටත් පිළිගනිමි.

மேற்குறித்த தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்று இதன்மூலம் நான் வெளிப்படுத்துவதுடன். மேலும், ஏதேனும் தகவல்கள் உண்மையற்றது அல்லது தவறானவை எனக் கண்டறியப்பட்டால், அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு தனது கையொப்பத்துடன் வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டையை திரும்பப் பெறவோ அல்லது இரத்து செய்யவோ முழு அதிகாரம் உள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

| Y | Y | Y | Y | | M | M | | D | D |
|---|---|---|---|---|---|---|---|---|---|

Signature of the Applicant අයැදුම්කරුගේ අත්සන விண்ணப்பதாரரின் கையொப்பம்

Date දිනය திகதி

(The following recommendation does not apply to provincial journalists/ප්‍රාදේශීය මාධ්‍යවේදීන් සඳහා පහත නිර්දේශය අදාළ නොවේ

பிரதேச ஊடகவியலாளர்களுக்கு கீழ்வரும் பரிந்துரை அவசியமற்றது)

Recommendation of Head of Institution or Authorized Officer ආයතන ප්‍රධානී හෝ බලයලත් නිලධාරීගේ නිර්දේශය நிறுவனத் தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியின் பரிந்துரை.

Signature අත්සන கையொப்பம் :...........................................................

Name නම பெயர் :...........................................................

Designation තනතුර பதவி :...........................................................

Date දිනය திகதி :...........................................................

Official Stamp නිල මුද්‍රාව
உத்தியோகபூர்வ முத்திரை

This application should be sent with a request letter of the head of the organization. මෙම අයදුම්පත ආයතන ප්‍රධානියාගේ ඉල්ලීම් ලිපියක් සමග එවිය යුතුය. இந்த விண்ணப்பம் நிறுவனத்தின் தலைவரின் கோரிக்கை கடிதத்துடன் அனுப்பப்பட வேண்டும்.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2461/ 26 - 2025 නොවැම්බර් මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.11.06**

2461/26 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**அரசாங்க தகவல் திணைக்களம்**

**2026/2027 ஆம் ஆண்டுக்கான உத்தியோகபூர்வ ஊடக அடையாள அட்டைகளை வழங்குதல்**

வெகுசன ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடக தொழில்வாண்மையாளர்களின் அலுவல்களை சிறப்பாக நிறைவேற்றுவதற்குத் தேவையான சுதந்திரம் மற்றும் அமைதியான சூழலை உருவாக்குதல் அரசின் பொறுப்புக்கு அமைவாக சிறந்த மற்றும் தரமான வெகுசன ஊடக கலாசாரத்திற்காக அர்ப்பணிப்புடனுள்ள அரசாங்க தகவல் திணைக்களம், ஊடகவியலாளர்களின் தொழில் தரத்தை சிறப்பானதாக மேம்படுத்தி அவர்களது தொழிலின் கௌரவத்தை பாதுகாத்து, கடமைகளை எந்தவித தடையுமின்றி நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் தொழில்வாண்மை ரீதியிலான ஊடகவியலாளர்களுக்கு உத்தியோகபூர்வ ஊடக அடையாள அட்டையை விநியோகித்து வருகின்றது.

இந்த ஊடக அடையாள அட்டையை வழங்கும் பணியின் போது “செய்திகள் மற்றும் தகவல்களைத் திரட்டும், கட்டுரையாக்கும், தகவல்களைத் தொகுக்கும், சேகரித்த தகவல்களை அச்சு, இலத்திரனியல் அல்லது இணையத்தளம் மூலமாக வாசகர்களுக்கு தொடர்பாடல்களை மேற்கொள்பவர்” ஊடகவியலாளராக கருதப்படுவார். ஊடகவியலாளர் அடையாள அட்டை வழங்கப்படுவது இந்த பணிகளில் ஈடுபடும் தொழில்வாண்மை ரீதியிலான ஊடகவியலாளர்களுக்கு மட்டுமேயாகும்.

**01. ஊடக அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பப்படிவங்களை பரிந்துரைப்பதற்கான பொது நிபந்தனைகள்**

I. இந்த ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பப் படிவங்களை பரிந்துரைக்கின்ற போது தமது ஊடக நிறுவனத்தில் பணியாற்றுகின்ற தொழில்வாண்மை ஊடகவியலாளர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களை மாத்திரம் பரிந்துரைப்பதற்கு அனைத்து அச்சு, இலத்திரனியல் மற்றும் இணைய ஊடக நிறுவனத் தலைவர்கள் மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரி பொறுப்புடன் செயற்பட வேண்டும்.



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

II. ஊடக நிறுவன தலைவரால் உரிய ஊடக நிறுவனத்திற்குறிய ஊடகவியலாளர்கள் ஊடகத் தொழில்வாண்மையாளர்களது விண்ணப்பப்படிவங்களைப் பரிந்துரைப்பதற்காக அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியொருவரை பெயர் குறிப்பிடுவீர்களாயின், அவ்வாறு பெயரிடப்பட்ட அதிகாரியின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், பதவி, அலுவலக தொலைபேசி இலக்கம், மாதிரி கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரை போன்ற தகவல்களை 2025 ஆம் ஆண்டின் இறுதியில் அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஊடக அடையாள அட்டைப் பிரிவிற்கு அனுப்பி வைப்பதன் மூலம் அடையாள அட்டையை வழங்கும் செயற்பாட்டிற்கு இலகுவானதாக அமையும். அவ்வாறு பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரியை யாதேனுமொரு காரணத்தினால் மாற்றவேண்டி ஏற்படுமாயின், புதிதாக பெயரிடப்படும் அதிகாரியின் தகவல்களை விரைவாக எனக்கு அனுப்பி வைக்குமாறு ஊடக நிறுவனத் தலைவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

III. ஊடக நிறுவனத்தின் ஊடகவியலாளர் / ஊடகத் தொழில்வாண்மையற்ற பயிலுனர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவங்களை எக்காரணத்தைக் கொண்டும் பரிந்துரைக்க வேண்டாம். (பயிலுனர்களுக்கு எக்காரணம் கொண்டும் ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.)

IV. ஏதேனும் ஒரு ஊடக நிறுவனத்தினால் விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிக்கின்ற ஊடகவியலாளர்களது/ தொழில்வாண்மை ஊடகவியலாளர்களது தகவல்களை உள்ளடக்கியவாறு (அட்டவணை இலக்கம் 01க்கு இணங்க). குறித்த தகவல்களை உறுதிப்படுத்தி அல்லது அவர்களுக்காக ஊடக அடையாள அட்டை வழங்குதலை பரிந்துரைக்கின்றேன் என குறிப்பிட்டு உரிய நிறுவனத்தின் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டவரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரையிடப்பட்ட தழுவல் கடிதமொன்றினை நிறுவனத்தின் கடித தலைப்பில் அனுப்புதல் வேண்டும். குறித்த தழுவல் கடிதத்தில் பெயர் குறிப்பிடப்படாத அனைத்து விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

| *தொடர் இல.* | *பெயர்* | *தேசிய அடையாள அட்டை இலக்கம்* | *பதவி* | *கடமை புரியும் பிரிவு* |
|---|---|---|---|---|
| 01 | | | | |
| 02 | | | | |

(அட்டவணை இலக்கம் 01)

V ஏதேனும் ஒரு ஊடக நிறுவனத்தினால் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கின்ற பிரதேச தகவல்களை ஊடகவியலாளர்களின் தகவல்களை உள்ளடக்கியவாறு (அட்டவணை இலக்கம் 02 க்கு இணங்க). குறித்த தகவல்களை உறுதிப்படுத்தி அல்லது அவர்களுக்காக ஊடக அடையாள அட்டை வழங்குதலை பரிந்துரைக்கின்றேன் என குறிப்பிட்டு உரிய நிறுவனத்தின் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டவரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரையிடப்பட்ட தழுவல் கடிதமொன்றினை நிறுவனத்தின் கடித தலைப்பில் அனுப்புதல் வேண்டும். இங்கு உரிய பிரதேச ஊடகவியலாளர்களின் தகவல்கள் மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறே, இந்தப் பெயர் பட்டியலின் மென்பிரதி (Soft Copy) id@dgi.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். (தற்போது செய்திகளை வழங்குகின்ற கடமையில் ஈடுபடும் நிருபர்களின் பெயர்கள் மாத்திரம் பெயர் பட்டியலில் உள்ளடக்குவதற்கு ஊடக நிறுவனத்தின் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரி கவனம் செலுத்த வேண்டும்.) குறித்த தழுவல் கடிதத்தில் பெயர் குறிப்பிடப்படாத அனைத்து விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

| *தொடர் இலக்கம்* | *பிரதேச ஊடகவிய லாளரின் பெயர்* | *தேசிய அடையாள அட்டை இலக்கம்* | *நிர்ந்தர முகவரி* | *ஊடகவியலாளரின் தொலைபேசி இலக்கம்* | *செய்திகளை அறிக்கையிடும் மாவட்டம் மற்றும் பிரதேசம்* |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

(அட்டவணை இலக்கம் 02)

VI. ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்காக ஊடக நிறுவனம் சமர்ப்பிக்கின்ற பெயர் பட்டியல் மற்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பான அனைத்துப் பொறுப்பும் அதனை உறுதிப்படுத்துகின்ற ஊடக நிறுவனத் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியையே சாரும். ஊடக அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கை உள்ளடக்கிய கடிதத்தை உறுதி செய்பவர் பெயர் பட்டியலின் அனைத்து பக்கங்களிலும் தனது கையெழுத்து மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரையை பதித்து உறுதிப்படுத்தல் வேண்டும்.

VII. இந்த அனைத்து பெயர் பட்டியலுக்கு மேலதிகமாக, அனைத்து விண்ணப்பத்திலும் வெவ்வேறாக ஊடக நிறுவனத் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியினால் தமது கையொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ பதவி முத்திரை இடப்பட்டு பரிந்துரைக்கப்படல் வேண்டும்.

VIII. இந்த ஊடக அடையாள அட்டை 2026/2027 ஆகிய இரு வருடங்களுக்காக (செல்லுபடியாகும் காலம் விநியோகிக்கப்பட்ட திகதி தொடக்கம் 2027.12.31 வரை ) விநியோகிக்கப்படும்.

IX. ஊடக நிறுவனம் பணியிலிருந்து நீக்கம் செய்கின்ற /விலகிச் செல்கின்ற ஊடகவியலாளரின் அடையாள அட்டை, அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்திடம் மீள ஒப்படைப்பது ஊடக நிறுவனத் தலைவரின் பொறுப்பாகும். அவ்வாறு ஒப்படைக்கப்படாமல் அதற்கு பதிலாக நியமிக்கப்படுகின்ற வேறொரு நபருக்காக ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது என்பதுடன், அவ்வாறான விண்ணப்பப்படிவத்தினை பரிந்துரை செய்யாதிருக்க உரிய ஊடக நிறுவனத்தின் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரி பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

X. தனிப்பட்ட விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கில் இந்த ஊடக அடையாள அட்டையை பயன்படுத்துவது தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப்பெற்றால், அது தொடர்பில் விசாரணை செய்து சம்பந்தப்பட்ட ஊடகவியலாளரின் அடையாள அட்டையை செல்லுபடியற்றதாக்கும் முழுமையான அதிகாரம் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தை சார்ந்ததாகும். அவ்வாறான சந்தர்ப்பத்தில், அவ்வாறு செல்லுபடியற்றதாக்கப்பட்ட அடையாள அட்டையை அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவரின் அறிவித்தலுக்கு இணங்க, இரண்டு நாட்களுக்குள் அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு ஒப்படைப்பது, அந்த ஊடக அடையாள அட்டையை வழங்குமாறு பரிந்துரைத்த நிறுவனத்தின் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியின் பொறுப்பாகும்.

**02. ஊடக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரியினால் கவனம் செலுத்தப்பட வேண்டிய அடிப்படை விடயங்களும் ஊடக அடையாள அட்டை வகைப்படுத்தலும்.**

I. 2026 / 2027 ஆம் ஆண்டுக்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகைப்படுத்தலின் கீழ் இங்கு ஒவ்வொரு அடையாள அட்டை வகைப்படுத்தலுக்கு இணங்க குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களின் பிரகாரம் இந்த உத்தியோகபூர்வ ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற போது விண்ணப்பதாரிகள் மற்றும் அடையாள அட்டையைப் பரிந்துரைப்போர் இது தொடர்பாக தனிப்பட்ட கவனத்தினை செலுத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| அ. ஊடகவியலாளர் | (Journalist) |
| ஆ. சுதந்திர ஊடகவியலாளர் | (Freelance Journalist) |
| இ. வெளிநாட்டு ஊடகவியலாளர் தற்காலிகம் | (Foreign Journalist - Temporary) |
| ஈ. ஊடக நிர்வாகி | (Media Administrator) |
| உ. தொழில்நுட்ப கலைஞர் | (Technician) |
| எ. ஊடக சேவை | (Media services) |

II. யாதேனுமொரு ஊடக நிறுவனமொன்றிற்காக செல்லுபடியாகும் காலம் முடிவுறுத்தப்படாத உத்தியோகபூர்வ அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்டுள்ள ஊடகவியலாளர்கள் / ஊடக தொழில்வாண்மையாளர்கள் அந்த அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள ஊடக நிறுவனத்திலிருந்து பணியிலிருந்து நீங்கினால் / நீக்கம் செய்யப்பட்டால் அந்த உத்தியோகபூர்வ ஊடக அடையாள அட்டையை அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைத்த பின்னர் மாத்திரம் அந்த நபருக்கு பிரிதொரு ஊடக நிறுவனத்திற்கான அல்லது சுதந்திர வெகுசன ஊடகவியலாளருக்கான புதிய அடையாள அட்டை வழங்கப்படும். அவ்வாறான ஊடகவியலாளர்/ ஊடக தொழில்வாண்மையாளர்கள் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கின்ற போது இவ்விடயம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

III. அங்கீகரிக்கப்பட்ட ஊடக நிறுவனத்தில் நிரந்தர அல்லது ஒப்பந்த அடிப்படையில் வெகுசன ஊடகவியலாளர் / ஊடக தொழில்வாண்மையாளர்களாக ஆகக் குறைந்தது 06 மாதங்களுக்கும் அதிகமான காலம் பணியாற்றுகின்றவர்கள் மாத்திரம் இந்த உத்தியோகபூர்வ ஊடக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கலாம். (பயிலுனர்கள் மற்றும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.)

IV. அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப்பப்படிவத்துடன் தமது உத்தியோகபூர்வ அலுவலக அடையாள அட்டையின் பிரதியொன்றும் தேசிய அடையாள அட்டை அல்லது அங்கீகரிக்கப்பட்ட கடவுச் சீட்டு அல்லது அங்கீகரிக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி மற்றும் தனது நிறுவனத் தலைவரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியால் அவரது பெயர், பதவி மற்றும் ஊடக நிறுவனத்தின் பெயர் கொண்ட உத்தியோகபூர்வ பதவி முத்திரையிடப்பட்டு தமது கையொப்பத்துடன் உறுதிப்படுத்தி முன்வைக்கப்பட வேண்டும். (அவ்வாறே. தேவையேற்படின், யாதேனுமொரு விண்ணப்பதாரியின் உத்தியோகபூர்வ அலுவலக அடையாள அட்டையை பரிசீலிக்கும் அதிகாரம் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்திற்கு அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியைச் சார்ந்ததாகும்.)

V. அலுவலக அடையாள அட்டையை சமர்ப்பிக்க முடியாத சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரரின் நிறுவன தலைவர் அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியால் அவரது பெயர், பதவி மற்றும் ஊடக நிறுவனத்தின் பெயருடன் உத்தியோகபூர்வ பதவி முத்திரையிட்டு அவரது கையொப்பத்துடன் நியமனக்கடிதத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியை சமர்ப்பிக்க வேண்டும்.

VI. விண்ணப்பப்படிவத்தின் அனைத்துப் பகுதிகளும் தெளிவான கையெழுத்தில் அல்லது அச்சிடப்பட்டு சரியாக பூரணப்படுத்தப்பட வேண்டும். தெளிவில்லாத. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையாயின் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை மீளவும் முன்வைக்க வேண்டும்.

VII. விண்ணப்பப்படிவத்துடன் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு இரண்டு நிழற்படங்கள் முன்வைக்கப்படல் வேண்டும்.

- விண்ணப்பிக்கும் திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் எடுக்கப்பட்ட நிழற்படமாயிருத்தல்
- எவ்வகையிலும் உருமாற்றம் செய்யப்படாத நிழற்படமாயிருத்தல் வேண்டும்.
- 3.5cm × 4.5cm ( கடவுச் சீட்டு அளவான நிழற்படம்) இருத்தல்
- வெள்ளை அல்லது இள நீலம் பின்னணியை கொண்ட தெளிவான வர்ண நிழற்படம் (நிழற்படத்தின் பின்னணி வெள்ளை அல்லது இள நீலமாக அமைவதனால் அதற்கேற்ப பொருத்தமான ஆடைகளின் நிறம், தலைமயிரின் நிறங்களை கவனத்திற்கொண்டு குறித்த ஒவ்வொரு பகுதிகள் மிக தெளிவாக தென்படும் வகையில் நிழற்படத்தினை எடுப்பதன் ஊடாக மிக தரமான நிறைவுபெற்ற ஊடக அடையாள அட்டையினை பெற்றுக்கொள்ளக்கூடிய இயலுமை உள்ளது என்பதனை நினைவுபடுத்துகின்றேன்).
- ஒரு நிழற்படம் விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் கழறாதவாறு ஒட்டப்பட்டிருக்க வேண்டும். அடுத்த நிழற்படம் சேதமடையாதவாறு ஒரு உறையில் இட்டு விண்ணபத்தில் இணைக்கப்பட வேண்டும்.

VIII. அரசாங்க தகவல் திணைக்கள ஊடக அடையாள அட்டைப் பிரிவு எதிர்பார்க்கின்ற உரிய அளவிற்கு ஏற்புடையதற்ற மற்றும் தெளிவற்ற விதத்திலான நிழற்படங்கள் கொண்ட, நிழற்படம் இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

IX கௌரவப் பெயர் மற்றும் கல்வித் தகைமைகள் ஊடக அடையாள அட்டையில் குறிப்பிடப்படமாட்டாது. ஊடக அடையாள அட்டையில் ஊடகவியலாளரின் பெயர் மற்றும் தொழில் தகவல் மாத்திரமே குறிப்பிடப்படும்.

X புனைப் பெயர்களில் செய்திகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் / நிகழ்ச்சிகளின் திரையாக்க ஊடகவியலாளர்களின் புனைப் பெயர்களில் ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

XI. இந்த ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிக்கின்ற போது 03 ஆவது பிரிவில் உள்ள விடயம் தொடர்பில் அதிக கவனத்தினைச் செலுத்தி தமக்கு உரியதான அடையாள அட்டை வகையினை அறிந்துகொண்டு அதற்கு உரியதான மாதிரியிலான விண்ணப்பப்படிவத்தினை மாத்திரம் சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரர்கள் தனது கவனத்தை செலுத்த வேண்டும். உரிய மாதிரிக்கு இணங்க சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**03. ஒவ்வொரு வகைப்படுத்தலுக்குமான ஊடக அடையாள அட்டையை வழங்குவதற்கு உரியதான நிபந்தனைகள், விண்ணப்பிக்க வேண்டிய விதம் மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய மேலதிக ஆவணங்கள்**

**அ. ஊடகவியலாளர்கள் (Journalist)**

I. அச்சு (பத்திரிகை, சஞ்சிகை மற்றும் பருவ வெளியீடுகள்), இலத்திரனியல் (தொலைக்காட்சி மற்றும் வானொலி) மற்றும் இணைய ஊடக நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலக ஊடகவியலாளர்களுக்காக இந்த ஊடகவியலாளர் (Journalist) அடையாள அட்டை வழங்கப்படுகின்றன.

II. இந்த வகைப்படுத்தலின் கீழ் ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 02 VII பிரிவின் பிரகாரம் உரிய விண்ணப்பதாரர்களின் நிழற்படங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

III. இங்கு ஒவ்வொரு வகை ஊடக நிறுவனங்களுக்கும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பொருந்தும்.

**(a) பத்திரிகை, சஞ்சிகை மற்றும் பருவ வெளியீட்டு நிறுவனங்கள்**

- ஊடக அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்கின்ற பத்திரிகை/ சஞ்சிகை/ பருவ வெளியீடுகள் தொடர்ச்சியாக வெளியிடப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தும் வகையில், ஊடக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கின்ற திகதி முதல் முன்னைய 06 மாத காலங்கள் வரை பிரசுரிக்கப்பட்ட பிரதிகள் (தேவைப்பாட்டிற்கு இணங்க மாத்திரம்) மற்றும் தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதழின் பிரதியை நிறுவனத்தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியினால் அவரது பெயர், கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை இட்டு உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.

- ஊடக அடையாள அட்டைக்காக சமர்ப்பிக்கின்ற அனைத்து பத்திரிகை / சஞ்சிகை / பருவ வெளியீடுகளுக்கு இலங்கை பத்திரிகைப் பேரவையில் பதிவு செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழின் பிரதியை நிறுவனத்தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியினால் அவரது பெயர், கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை இட்டு உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.

- யாதேனுமொரு பத்திரிகையுடன் வெளியிடப்படுகின்ற மேலதிக வெளியீடுகள் வேறு பத்திரிகையாகக் கருதப்படாது என்பதுடன், அவ்வாறான விண்ணப்பப்படிவங்கள் பிரதான பத்திரிகையின் பெயரில் மாத்திரமே முன்வைக்கப்பட வேண்டும். (ஊடக அடையாள அட்டை வழங்கப்படுவது பிரதான பத்திரிகைகளின் பெயர்க்கேயன்றி மேலதிக வெளியீடுகளின் பெயரிற்கல்ல)

- மாதாந்த வெளியீடு ஒன்றுக்காக ஆகக் குறைந்தது 03 ஊடக அடையாள அட்டையும், இரண்டு மாத காலங்களுக்கான வெளியீடு ஒன்றுக்காக ஆகக் குறைந்தது 02 அடையாள அட்டையும் மற்றும் மூன்று மாத காலங்களுக்கான வெளியீடு ஒன்றுக்காக ஆகக் குறைந்தது 01 அடையாள அட்டை மாத்திரம் வழங்கப்படும். ஆறு மாத காலம் அல்லது வருடாந்தம் ஒன்று என்றவாறான வெளியீடு/ சஞ்சிகை போன்றவற்றிற்கு ஊடக அடையாள அட்டை வழங்கப்பட மாட்டாது.

- பல்வேறு விடயங்களுக்கான துறைகளுக்குப் பொருத்தமாக வெளியிடப்படுகின்ற கையேடுகள் (Handbooks) அல்லது செய்திகள், நடப்பு ரீதியான தகவல்களிலிருந்து நீங்கிய வெளியீடுகளின் தொழில்துறையினர்களுக்காக இந்த ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

**(b) இலத்திரனியல் (வானொலி மற்றும் தொலைக்காட்சி) ஊடக நிறுவனங்கள்**

- ஊடக அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்கின்ற வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்கள், இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் வெகுசன ஊடக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினால் இலத்திரனியல் ஒலி -ஒளிபரப்பு சேவைக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் பிரதிகள் நிறுவனத்தின் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியால் உரியவரின் பெயர், கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

- வாராத்திற்கு ஆகக் குறைந்தது செய்தி மற்றும் நடப்பு விவகார நிகழ்ச்சிகள் 05 அல்லது ஒலி-ஒளிபரப்புச் செய்கின்ற கேபல் தொலைக்காட்சி (Cable TV) நிறுவனம், செய்மதி தொலைக்காட்சி (Satellite TV) நிறுவனம் மற்றும் இணைய அடிப்படையிலான தொலைக்காட்சி (IPTV) நிறுவனங்களின் செய்திப் பிரிவு ஊடகவியலாளர்களுக்காக மாத்திரம் (ஆகக் குறைந்தது 10 இற்கு உட்பட்டதாக) ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. இங்கு குறித்த நிறுவனம் தமது அலைவரிசையின் நிகழ்ச்சி தொடர்பான விபரத்தினை சமர்ப்பிக்க வேண்டும்.

- அவ்வாறே, ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கின்ற கேபள் தொலைக்காட்சி (Cable TV) நிறுவனம், செய்மதி தொலைக்காட்சி (Satellite TV) நிறுவனம் இணைய அடிப்படையிலான தொலைக்காட்சி (IPTV) நிறுவனங்கள், இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் வெகுசன ஊடாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினால் இலத்திரனியல் ஒலி-ஒளிபரப்புச் சேவைக்காக வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்களின் பிரதிகள் நிறுவனத்தின் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியால் உரியவரின் பெயர், கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**(c) இணைய ஊடக நிறுவனங்கள்**

- வெகுசன ஊடக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் 2026 ஆம் ஆண்டுக்காக பதிவு செய்யப்பட்ட, செய்தி மற்றும் நடப்பு விவகாரங்களை அறிக்கைப்படுத்துகின்ற இணையத் தளங்களில் பணியாற்றுகின்ற ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் ஊடக அடையாள அட்டை விநியோகிக்கப்படும். (இணையத்தள தலைவர்/ இணையத்தள நிருவாகி / கவனர்/நிருவாகப் பணிப்பாளர் போன்ற வெளியகப் பதவிகளுக்காக ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது)

- ஆகவே ஊடக அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு இணையத்தளமும் வெகுசன ஊடக விடயத்திற்கு உரிய அமைச்சினால் வெளியிடப்பட்ட 2026 ஆம் ஆண்டுக்கான செல்லுபடியாகும் பதிவுச்சான்றிதழின் பிரதியை நிறுவனத்தின் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியால் உரியவரின் பெயர், கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- ஊடக அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்கின்ற அனைத்து செய்தி இணையத் தளங்களும் ஊடக நிறுவனமாக வியாபார பதிவினை (Business Registration) பெற்றிருத்தல் வேண்டும். (வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று நிறுவனத்தின் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியால் உரியவரின் பெயர், கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தி முன்வைக்கப்படல் வேண்டும்.)

- ஊடக அடையாள அட்டையை வழங்குகின்ற போது குறித்த இணையத்தளம் தொடராக செயற்படல், நோக்கம், வாசகர்களின் எண்ணிக்கை, நாளாந்தம் இற்றைப்படுத்தல் (Update) மற்றும் வேறு குறித்த விடயங்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும்.

- ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக ஆகக் குறைந்தது ஆறு மாத காலங்கள், நாளாந்தம் மற்றும் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தல் (Update) செய்யப்பட்ட இணையத் தளங்கள் மாத்திரமே இதற்கான தகைமையைப் பெறுவதுடன், இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படுகின்ற அறிக்கையிடல்களில் ஆகக் குறைந்தது 50% உள்ளடக்கங்கள் கட்டாயம் செய்தி மற்றும் நடப்பு விவகாரம் குறித்த தகவல்களாக இருத்தல் வேண்டும்.

- ஒரு இணையத் தளத்திற்கு ஒரு ஊடக மொழிக்கு (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) ஆகக் கூடியது 02 அடையாள அட்டைகளே வழங்கப்படும்.

- ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக இணைய ஊடகவியலாளர்கள் சமர்ப்பிக்கின்ற யாதேனுமொரு விண்ணப்பப்படிவம் தொடர்பில், தொடர்ந்தும் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளது என அறியப்படும் சந்தர்ப்பத்தில் அந்த விண்ணப்பப்படிவம் குறித்த பிரிவிற்கு அனுப்பப்பட்டு, அறிக்கையைப் பெற்றுக் கொண்டதன் பிற்பாடு மாத்திரமே அடையாள அட்டை வழங்கப்படும்.

- அரசின் மற்றும் அமைச்சுக்கள். திணைக்களங்கள் மற்றும் அரசுடன் இணைந்த நிறுவனங்கள் உள்ளடங்கலாக அரச நிறுவனங்களுக்கு உரியதான நிறுவன இணையத்தளங்களில் பணியாற்றுகின்ற தொழில்துறையினர்க்காக ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

(d) வெளிநாட்டு ஊடக நிறுவனங்கள்

- சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு நிறுவனங்களில் இலங்கைப் பிரதிநிதிகள்/ நிருபர்களாக அந்த நிறுவனத்தினால் நியமிக்கப்பட்டு, நிரந்தரமாக குறித்த ஊடக நிறுவனத்தில் பணியாற்றுகின்ற ஊடகவியலாளர்களுக்காக மாத்திரம் ஊடக அடையான அட்டை வழங்கப்படும்.

- விண்ணப்பதாரியினால் வழங்கப்படுகின்ற தகவல்கள், குறித்த வெளிநாட்டு ஊடக நிறுவனத்தினால் தொடர்ந்தும் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் மாத்திரமே அடையாள அட்டை வழங்கப்படும்.

- விண்ணப்பதாரி தமது ஊடக நிறுவனத்தில் பணியாற்றுவதாக குறித்த வெளிநாட்டு ஊடக நிறுவனத் தலைவரிடமிருந்து வழங்கப்பட்ட சேவைச் சான்றிதழை விண்ணப்பத்துடன் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

- வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கின்ற யாதேனுமொரு விண்ணப்பப்படிவம் தொடர்பில் தொடர்ந்தும் தகவல்கள் உறுதிப்படுத்தப்படல் அவசியம் என்று கருதும் சந்தர்ப்பத்தில், அந்த விண்ணப்பப்படிவம் குறித்த பிரிவிற்கு அனுப்பப்பட்டு. தேவையான அறிக்கைகள் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஊடக அடையாள அட்டை வழங்கப்படும்.

(e) பிரதேச ஊடகவியலாளர்கள் (Provincial Journalist)

- இணையத்தள ஊடக நிறுவனம், கேபள் தொலைக்காட்சி நிறுவனம், செய்மதி தொலைக்காட்சி நிறுவனம், இணையத்தளத்தை அடிப்படையாக கொண்ட தொலைக்காட்சி நிறுவனம், மாதாந்தம் ஒரு தடவை வரும் வெளியீடுகள், இரு மாதங்களுக்கு ஒரு தடவை வரும் வெளியீடுகள், மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை வரும் வெளியீடுகளுக்காக வழங்கப்படும் உயர்ந்தபட்ச ஊடக அடையாள அட்டைகள் எண்ணிக்கைக்கு உட்பட்டதாக மாத்திரம் குறித்த ஊடக நிறுவனங்களின் பிரதேச ஊடகவியலாளர்களுக்காக ஊடக அடையாள அட்டை விநியோகிக்கப்படும். ஏனைய ஊடக நிறுவனங்கள் குறித்த ஊடக நிறுவனங்களுக்கு நேரடியாகச் செய்தி வழங்கும் செயற்பாட்டை செய்யும் ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் ஊடக அடையாள அட்டை விநியோகிக்க பரிந்துரையை வழங்க செயற்பட வேண்டும்.

- விண்ணப்பத்தினை அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “பிரதேச ஊடகவியலாளர் அடையாள அட்டை” என குறிப்பிட வேண்டும்.

**ஆ. சுதந்திர ஊடகவியலாளர்கள் (Freelance Journalist)**

I. ஆகக் குறைந்தது ஒரு வருட காலம் தொடர்ச்சியாக சுதந்திர ஊடகவியலாளராக தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அச்சு, இலத்திரனியல் அல்லது இணைய ஊடக நிறுவனமொன்றில் சேவையாற்றி இருக்க வேண்டும்.

II. சுதந்திர ஊடகவியலாளர் அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கின்ற விண்ணபப்பப்படிவத்துடன், தம்மால் செய்தி, சிறப்புக் கட்டுரை வழங்கப்படுகின்ற அல்லது நடப்பு விவகார நிகழ்ச்சிகளுக்காக பங்களிப்புச் செய்கின்ற நிறுவனங்களிடையே ஆகக் குறைந்தது ஒரு நிறுவனத்திலிருந்தோ அல்லது குறிப்பிட்ட ஊடக நிறுவனத்திற்கு தொடர்ந்து செய்திகளை வழங்குவதாக /நடப்பு விவகார நிகழ்ச்சிகளுக்கு பங்களிப்பு செய்தலை அந்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் (Letter head) ஊடாக நிறுவனத்தின் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியால் அவரது உத்தியோகபூர்வ முத்திரையிட்டு கையொப்பமிடப்பட்ட கடிதமொன்றினை சமர்ப்பித்தல்,

III. அவ்வாறே, அதனை உறுதி செய்வதற்காக வேண்டி. விண்ணபத்தினை சமர்ப்பிக்கின்ற திகதிக்கு முன்னைய ஆறு மாத காலத்தினுள் தனது பெயரில் வெளியிடப்பட்ட செய்திகள் மற்றும் நடப்பு விவகாரங்கள் தொடர்பிலான அறிக்கையிடல் / சிறப்புக்கட்டுரை/விசித்திரமான ஆக்கம்/ புகைப்படங்கள் போன்றவை ஆகக் குறைந்தது பன்னிரண்டிற்குக் குறையாத எண்ணிக்கையில், உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகள் அல்லது இறுவட்டுக்கள் போன்றவற்றை முன்வைக்க வேண்டும்.

IV. இணைய ஊடக நிறுவனங்களுக்காக வழங்கப்படுகின்ற ஆகக் குறைந்த ஊடக அடையாள அட்டை எண்ணிக்கைக்கு இணங்க மாத்திரம் இணைய ஊடக நிறுவனங்களுக்காக சுதந்திர ஊடகவியலாளர் (Freelance Journalist) அடையாள அட்டை வழங்கப்படும்.

V. இந்த வகைப்படுத்தலின் கீழ் ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணபப்பப்படிவத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 02. VII பிரிவிற்கேற்ப உரிய விண்ணபதாரியின் நிழற்படம் முன்வைக்கப்படல் வேண்டும்.

**இ. வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் - தற்காலிகம் (Foreign Jour nalist-Temporary)**

I. செய்தி மற்றும் நடப்பு விவகார முக்கியத்துவம் வாய்ந்த விசேட சந்தர்ப்பங்களின் போது செய்தி சேகரிப்பு. கட்டுரைகளை வழங்குதல் மற்றும் செய்தி முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கை நிகழ்ச்சிகள் தயாரிப்பிற்காக இலங்கைக்கு வருகை தருகின்ற வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு “வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் தற்காலிகம்” ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

II. விண்ணபதாரியினால் தனது விண்ணபப்பப்படிவத்துடன், தான் பணியாற்றுகின்ற வெளிநாட்டு ஊடக நிறுவனத்தின் தலைவரினால் வழங்கப்பட்ட சேவைச் சான்றிதழ் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட கடிதத்தினை முன்வைக்க வேண்டும்.

III. விண்ணபதாரி தமது செல்லுபடியான கடவுச்சீட்டு மற்றும் அந்த கடவுச்சீட்டு உரிமையாளரின் தனிப்பட்ட தகவல்கள் உள்ளடக்கிய பகுதியின் நிழற்பிரதியொன்றும் விண்ணபப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

IV. இந்த வகைப்படுத்தலின் கீழ் ஊடக அடையாள அட்டையை பெற்றுக் கொள்வற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணபப்பப்படிவத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 02. VII பிரிவின் பிரகாரம் உரிய விண்ணபதாரர்களின் நிழற்படங்கள் முன்வைக்கப்பட வேண்டும். அத்துடன் கடவுச்சீட்டின் பிரதி ஒன்றும் இதற்காக முன்வைக்கப்பட வேண்டும்.

**ஈ. ஊடக நிர்வாகி (Media Administrator)**

I. தேசிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஊடக நிறுவனத்தில் ஊடக நிர்வாகத்திற்கு நேரடியாக பங்களிப்புச் செய்கின்ற ஊடக நிர்வாகிகளுக்கு (ஆகக் குறைந்தது ஒரு ஊடக நிறுவனத்தில் மூவருக்கு மாத்திரம்) இந்த ஊடக நிர்வாகி அடையாள அட்டை வழங்கப்படுகின்றன.

II. ஊடக நிறுவனங்களில் விற்பனை மேம்பாட்டு பணிப்பாளர்/முகாமையாளர்/ நலன்புரி அதிகாரி அல்லது விற்பனை மேம்பாட்டு துறையில் ஈடுபடுகின்ற அதிகாரிகளுக்காக இந்த அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

III. இந்த வகைப்படுத்தலின் கீழ் ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணபப்பப்படிவத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 02. VII பிரிவின் பிரகாரம் உரிய விண்ணபதாரர்களின் நிழற்படங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

**உ. தொழில்நுட்பக் கலைஞர்கள் (Technician)**

I. இலத்திரனியல் ஊடக நிறுவனங்களில் துறைசார் ஊடக செய்தி சேகரிப்பின் போது நேரடியாக ஈடுபடுகின்ற தொழில்நுட்பக் கலைஞர்களுக்காக இந்த அடையாள அட்டை வழங்கப்படுகின்றன.

II. இந்த வகைப்படுத்தலின் கீழ் ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 02. VII பிரகாரம் உரிய விண்ணப்பதாரர்களின் நிழற்படங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

**ஊ. ஊடகச் சேவை (Media Services)**

I. ஊடக நிறுவனங்களில் செய்தி மற்றும் நடப்பு விவகார பிரிவுகளின் நியதியின்படி துறைசார் ஊடகச் செய்தி சேகரிப்பின் போது நேரடியாக பங்களிப்புச் செய்கின்ற ஊடகப் பணிகளுக்குரியதான பதவிகளை உடையவர்களுக்காக இந்த ஊடகச் சேவை அடையாள அட்டை வழங்கப்படுகின்றன.

II. இந்த வகைப்படுத்தலின் கீழ் ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 02. VII பிரிவின் பிரகாரம் உரிய விண்ணப்பதாரர்களின் நிழற்படங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

**04. இதன்கீழ் கீழ்வரும் தொழில்துறையை சார்ந்தவர்களுக்கு ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.**

I. ஊடக நிறுவனங்களில் கடமைபுரியும் முகாமைத்துவ உதவியாளர்கள் /ஒருங்கிணைப்பாளர்கள் போன்ற நேரடியாக ஊடகவியலுடன் தொடர்பற்ற பதவிகளை வகிப்போர்.

II. வெளியீட்டு நிறுவனம், வர்த்தக விளம்பரம் மற்றும் காணொளி தயாரிப்பு நிறுவனம், செய்தி மற்றும் நடப்பு விவகாரங்களை அறிக்கையிடாத ஊடக நிறுவனங்களில் பதவிகளை வகிப்போர்.

III. திரைப்படம் / தொலைக்காட்சி நாடகம் / மேடை நாடகம் போன்ற கலைத்துறையில் ஈடுபடுகின்ற கலைஞர்கள்.

**05. பொது நிபந்தனைகள்**

I. ஊடக அடையாள அட்டை ஊடகப் பணிகளுக்காக மாத்திரம் பிரயோகிக்கப்பட வேண்டும். துஸ்பிரயோகம் அல்லது ஊடக நெறிமுறைகளுக்கு முரணான நடவடிக்கைகள் பதிவாகும் பட்சத்தில் ஊடக அடையாள அட்டையை இரத்து செய்யவோ அல்லது ஊடக அடையாள அட்டையை மீண்டும் அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு ஒப்படைக்க உத்தரவிடவோ அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளது.

II. 2026/2027 ஆம் ஆண்டிற்கான ஊடக அடையாள அட்டைகளை வழங்குவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது 2026 மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவடையும். அதன் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் மற்றும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

III. விண்ணப்பப்படிவங்களை www.dgi.gov.lk அல்லது www.news.lk என்ற இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்பதுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இலக்கம் 163, கிருலப்பன மாவத்தை, கொழும்பு 05 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் அல்லது நேரடியாகவும் வழங்க முடியும்.

IV. காணாமல் போன ஊடக அடையாள, அட்டைக்குப் பதிலாக தொடர்புடைய ஆண்டிற்கான புதிய ஊடக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது, சம்பந்தப்பட்ட ஊடக அடையாள அட்டை காணாமல் போனதற்கான பொலிஸ் முறைப்பாட்டின் பிரதியை சமர்ப்பிக்க வேண்டும்.

V. தனிப்பட்ட நலனுக்காக ஊடக அடையாள அட்டைகளை தவறாகப் பயன்படுத்துவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றால் அது தொடர்பாக ஆராய்ந்து சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்களின் ஊடக அடையாள அட்டைகளை இரத்து செய்யும் முழு அதிகாரம் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்திற்கு உண்டு.

VI. ஊடக அடையாள அட்டைகளை வழங்குவதற்கான இறுதித் தீர்மானம். மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தேவைகளை சமகால அடிப்படையில் மாற்றுவதற்கான அதிகாரம் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்திற்கே உரித்தானது.

**எச். எஸ். கே. ஜே. பண்டார,**
அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்.

E0911-0049

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.